"சொட்டு நீர்ப் பாசன விவசாயிகளுக்கு மானியம் வழங்க குழு'

First Published : 26 Jul 2011 01:18:39 PM IST

கோபி, ஜூலை 25: சொட்டு நீர்ப் பாசன விவசாயிகளுக்கு மானியம் வழங்க அதிகாரிகள் குழு அமைக்கப்பட உள்ளதாக, வேளாண் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் பேசினார்.

கொடிவேரி அணை பாசனதாரர்கள் சங்கம் மற்றும் கொடிவேரி அணைக்கட்டு திட்ட முறை நீர்ப் பாசன விவசாயிகள் சங்கம் சார்பில், அமைச்சர்கள் மற்றும் விவசாயிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம், கோபியில் சங்கத் தலைவர் பி.எம்.பழனிசாமி தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் பேசியது:

விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள், பூச்சி மருந்துகள், சொட்டு நீர்ப் பாசன கருவிகளை நேரடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. போலி பூச்சி மருந்து விற்பனையாளர்களிடம் இருந்து போலியான மற்றும் தரம் குறைந்த பொருட்கள் வாங்குவதைத் தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வரும் பட்ஜெட் கூட்டத் தொடரில், விவசாயிகளுக்கு பல்வேறு நலத் திட்டங்களை முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பார். சொட்டு நீர்ப் பாசன மானியம் வழங்க அதிகாரிகள் குழு அமைக்கப்பட உள்ளது என்றார்.

அமைச்சர் கே.வி.ராமலிங்கம் பேசியது: மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்கு முன்கூட்டியே தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. முறைநீர்ப் பாசனத்தைத் தவிர்த்து, தொடர் பாசன வசதி செய்து தர வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். இதுகுறித்து முதல்வரிடம் ஆலோசனை நடத்தப்படும். அமராவதி அணை, வைகை அணையை தூர்வாரும் பணி நடைபெற்று வருகிறதுஎன்றார்.

**வேளாண் பல்கலை.யில் ரூ.3.48 கோடியில் கட்டடங்கள்**

First Published : 26 Jul 2011 12:58:41 PM IST

கோவை, ஜூலை 25: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்களில் ரூ.3.48 கோடியில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை முதல்வர் ஜெயலலிதா திங்கள்கிழமை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்குட்பட்ட கோவை விதை மையத்தின் முதல் மாடியில் புதிய ஆய்வகக் கூடங்கள், சிறுதானிய இனப்பெருக்க நிலையத்தின் பண்ணை அலுவலகம் மற்றும் கிடங்கு என பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களில் ரூ.3.48 கோடியில்

கட்டப்பட்ட புதிய கட்டடங்களை முதல்வர் ஜெயலலிதா, சென்னை தலைமைச்செயலகத்தில் இருந்தபடி விடியோ கான்பரன்சிங் முறையில் தொடங்கி வைத்தார்.

மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் ரூ.2.89 கோடியில் கட்டப்பட உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு குடியிருப்பு, பல்கலைக்கழக தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய காய்கறி பயிர்கள் துறைக்கு அலுவலக கட்டடம், ஆய்வுக்கூடங்கள், தென்னை ஆராய்ச்சி நிலைய விதை சேமிப்புக் கிடங்கு ஆகியவைகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

பின்னர் அவர் பேசுகையில், 'தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வசதிகளால் இங்கு படிக்கும் மாணவ, மாணவியரும், பணியாளர்களும், விவசாயிகளும் நல்ல முறையில் பயன்பெற்று, எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டும்' என்றார்.

வேளாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், தொழில்துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, வேளாண் துறை செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் ப.முருகேசபூபதி, கோவை மாவட்ட ஆட்சியர் எம்.கருணாகரன், எம்.பி. சுகுமார், எம்.எல்.ஏ-க்கள் தா.மலரவன், பொள்ளாச்சி ஜெயராமன், ஒ.கே.சின்னராஜ், சேலஞ்சர் துரை (எ) ஆர்.துரைசாமி, வி.சி.ஆறுக்குட்டி, கருப்புசாமி, தாமோதரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**முட்டை விலை**

First Published : 26 Jul 2011 10:33:41 AM IST

நாமக்கல், ஜூலை 25: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ. 2.37, சென்னையில் ரூ. 2.45.

தினமலர்

**பாலை பாதுகாக்கும் முறைகள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2011,00:00 IST

**நவீன தொழில்நுட்பம்**

* **கொதிக்கவைத்து பாலின் தரமறிதல்**: 5 மில்லி பாலை சோதனைக்குழாயில் எடுத்து சூடுசெய்ய

வேண்டும். பொங்கி வந்தால் நல்ல பால். திரிந்துபோனால் பால் கெட்டுவிட்டது என அறிந்துகொள்ளலாம்.

* **பால்மானிச் சோதனை**: பால்மானியின் அளவு 24க்கு குறைந்திருந்தால் தண்ணீர் கலந்த பால் எனலாம். எருமைப்பாலில் 26-28, பசும்பாலில் 28-30, கொழுப்பு நீக்கப்பட்ட பாலில் 30-32 இருக்கும்.

* **கொழுப்பு அறியும் சோதனை**: கெர்பர் பியுட்டிரா மீட்டரில் 10 மி.லி, கெர்பர் அமிலம், 10.75 மிலி பால், 1 மி.லி. அமைல் ஆல்கஹால் சேர்த்து கெர்பர் சென்டிரிபியூஜில் வைத்து 3 நிமிடம் சுற்றினால் கொழுப்பு தனியாக தெரியும். பசும்பாலில் 3-5 சதம், எருமைப்பாலில் 6-8 சதம் கொழுப்புச்சத்து இருக்கும்.

* **கொழுப்பற்ற திடப்பொருளின் அளவு**: 0.25 து பால்மானி அளவு (27 டிகிரி செ) + (0.25 து கொழுப்புச்சதம்) + 0.44.

* **குளிர வைத்தல்**: பாலைக் கேன் கூலர் (அ) பல்க் கூலரில் 2டிகிரி செ.க்கு குளிரவைத்து ஒரு நாள் வரை கெடாமல் பாதுகாக்கலாம்.

* **பதப்படுத்துதல்**: பாலை 63 டிகிரி செ.க்கு 10நிமிடம் சூடுசெய்து 5 டிகிரி செ.க்கு குளிரவைத்து ஒரு நாள் வரை கெடாமல் பாதுகாக்கலாம்.

* **பதப்படுத்துதல்**: பாலை 63 டிகிரி செ.க்கு 30 நிமிடங்கள் சூடுசெய்து 5 டிகிரி செ.க்கு குளிரவைத்தால் ஒரு வாரம் வரை கெடாமல் பாதுகாக்கலாம். இதற்கு குறைந்த வெப்பம், அதிக நேரம் பாஸ்டுரைசேஷன் என்று பெயர்.

**கிரீம், வெண்ணெய், நெய் தயாரித்தல்**

* **கிரீம்**: (40 சதம் கொழுப்பு) - பாலை கிரீம் செப்பரேட்டர் மிஷினில் ஊற்றி இயக்கினால் கிரீம் ஒரு புறமும் கொழுப்பு நீக்கப்பட்ட பால் மறுபுறமும் பிரிந்துவரும். கிரீம் எடுப்பதற்கு கறந்த பாலை அப்படியே உபயோகப்படுத்த வேண்டும். குளிர்விக்கப்பட்ட பாலில் கிரீம் எடுக்க முடியாது.

* **வெண்ணெய்**: ( 80 சதம் கொழுப்பு) - சூடு செய்து ஆறவைத்த கிரீமை குளிர்சாதனப் பெட்டியில் 1 நாள் வைத்திருந்து வெண்ணெய் கடையும் இயந்திரம் மூலம் வெண்ணெய் தயாரிக்கலாம். கிரீமை இயந்திரத்தில் கால்வாசி அளவே நிரப்ப வேண்டும். இயந்திரம் சுற்றும்பொழுது 10 டிகிரி செ.க்கு குளிர்ந்த நிலையில் இருக்க வேண்டும். வெண்ணெய் உருவான பிறகு மீதமுள்ள நீரை அடியிலுள்ள குழாய் வழியே வெளியேற்ற வேண்டும். இந்த வெண்ணெயில் உண்பதற்கென்றால் 3 சதம் உப்பு சேர்க்கலாம். நெய் தயாரிப்பதற்கு என்றால் உப்பை சேர்க்கக்கூடாது.

**நெய்**: (99.9 சதம் கொழுப்பு) - கிரீம் (அ) வெண்ணெயைக் காய்ச்சினால் நெய் கிடைக்கும். கிரீமில் உறைமோர் ஊற்றி மறுநாள் காய்ச்சினால் நெய் வாசனையுடன் இருக்கும். கிரீமிலிருந்து நெய் தயாரிக்கும்பொழுது கசடு அதிகமாக இருக்கும்.

-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**வெள்ளாடு வளர்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2011,00:00 IST



வெள்ளாடு ""ஏழைகளின் பசு" என்று அழைக்கப் படுகிறது. இது மானாவாரி நிலம் சார்ந்த பண்ணையத் தொகுப்பின் முக்கிய அங்கம் ஆகும். மேட்டுப்பாங்கான நிலங்களில் பசுக்களையும், எருமைகளையும் வளர்க்க இயலாது. எனவே இத்தகைய சூழலுக்கு உகந்தது. வளர்ப்பில் குறைந்த முதலீட்டைக் கொண்டு நல்ல லாபம் பெறலாம்.

**ஒரு ஆட்டுக்கு 15 சதுரடி**: வளர்ந்த ஒரு ஆட்டுக்கு பதினைந்து சதுர அடி இடம் தேவைப்படும். நாம் வளர்க்க எண்ணும் ஆடுகளுக்கேற்ற அளவில் பட்டி அமைத்துக்கொள்ளலாம். செம்மறி ஆடாக இருந்தால், நைலான் வலையிலேயே பட்டி அமைக்கலாம். வெள்ளாடுகளுக்கு கம்பி வலை அல்லது சுவர் மூலமாகத்தான் அமைக்க வேண்டும். பட்டிக்குள் கிடாக்கள், குட்டிகள், சினை ஆடுகள், வளரும் ஆடுகள் என தனித்தனியாகப் பிரித்து அடைத்து வைப்பதற்காக தனித்தனிக் கொட்டகைகள் அமைக்க வேண்டும்.

**தண்ணீர் கவனம்:** காலை ஒன்பது மணி அளவில் ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்பிவிட்டு, கொட்டகைகளை சுத்தம் செய்துவிட வேண்டும். பதினோரு மணி அளவில் ஆடுகளுக்கு அடர் தீவனம் கொடுக்க வேண்டும். பின் கடலைப் பிண்ணாக்கு ஊறவைத்த தண்ணீர் கொடுக்க வேண்டும். தோட்டங்களில் தேங்கி நிற்கும் தண்ணீரைக் குடிக்கவிட்டால் நோய்கள் தொற்ற வாய்ப்பு இருக்கிறது. அதனால் தண்ணீர் சுத்தமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

**வெயில் நேரத்தில் மேய்ச்சல் வேண்டாம்**: வெயில் அதிகமாக அடிக்கும் மதிய நேரத்தில் ஆடுகளை மேயவிடும்போது சோர்ந்துவிடும். அந்த நேரங்களில் பட்டியில் அடைத்துவிட்டு வேலிமசால், முயல்மசால், கோ-4 மாதிரியான பசுந்தீவனங்களை நறுக்கிப்போட வேண்டும். தினமும் வேறு

வேறு தீவனங்களை மாற்றி மாற்றிக்கொடுப்பது நல்லது. பகல் மூன்று மணிக்குப் பிறகு ஐந்தரை மணி வரை மேய்ச்சலுக்கு அனுப்பலாம். மூன்று மாதங்க ளுக்கு ஒருமுறை ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும். ஒவ்வொரு பருவத்துக்கும் போடவேண்டிய தடுப்பூசிகளைக் கட்டாயம் போட்டுவர வேண்டும்.

இரண்டு வருடத்தில் மூன்று ஈற்று எட்டு மாதத்தில் இருந்து ஒரு வருடத்திற்குள் பெட்டை ஆடுகள் பருவத்துக்கு வந்துவிடும். அந்த சமயத்தில் நல்ல தரமான கிடாக்களோடு சேர்த்துவிட வேண்டும். ஆட்டுக்கு சினைப்பருவம் ஐந்து மாதங்கள். குட்டி போட்ட இரண்டு மூன்று மாதங்களில் அடுத்த பருவத்திற்கு தயாராகிவிடும். எட்டு மாதத்திற்கு ஒருமுறை குட்டி ஈனுவதால், சராசரியாக இரண்டு வருடத்தில் மூன்று முறை குட்டி ஈனும். ஒரு ஈற்றுக்கு இரண்டு குட்டிகள் கிடைக்கும். நாற்பது நாட்கள் வரை குட்டிகளை தாய் ஆட்டிடம் பால் குடிக்கவிட்டு பிறகு பிரித்துவிட வேண்டும். அப்போதுதான் தாய் ஆடு சீக்கிரம் பருவத்திற்கு வரும். தொடர்புக்கு: ஆர்.ஜி.ரீஹானா, அக்ரி கிளினிக், 268/77, பழைய ஹவுசிங் யூனிட், தாராபுரம்-638 657.

ஆர்.ஜி.ரீஹானா,தாராபுரம்-638 657.மொபைல்: 89037 57427.

**மண் பரிசோதனை விழிப்புணர்வு முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 26,2011,23:18 IST

திட்டக்குடி : திட்டக்குடி அடுத்த ஆக்கனூரில் மண் பரிசோதனை விழிப்புணர்வு முகாம் நடந்தது. மங்களூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ராஜலட்சுமி தலைமை தாங்கி மண் மற்றும் பாசன நீர் பரிசோதனையின் அவசியம் குறித்து பேசினார். உதவி வேளாண் அலுவலர் ரமேஷ் வரவேற்றார். கடலூர் மண் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் விஜயலட்சுமி மண் மாதிரி சேகரிக்கும் முறை, மண்ணில் ஏற்படும் பிரச்னைகள் மற்றும் சீர்திருத்த முறைகள் குறித்து பேசினார். மண் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் தரணி காமாட்சி பாசன நீர் மாதிரி சேகரிக்கும் முறை, பாசன நீரில் ஏற்படும் பிரச்னைகள், சீர்திருத்த முறைகள் குறித்து பேசினார். மங்களூர் வட்டார துணை வேளாண்மை அலுவலர் கோவிந்தசாமி நுண்ணூட்ட சத்துக்கள் இடுவதன் அவசியம் குறித்து பேசினார். ஆக்கனூர் கிராமத்தைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். உதவி வேளாண்மை அலுவலர் மேகநாதன் நன்றி கூறினார்.

**கறவைமாடுகள் வளர்ப்பில் இனப்பெருக்க மேலாண்மை**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2011,00:00 IST

நாம் செய்யும் மிகப்பெரிய தவறு மாடுகள் பால் கொடுக்கும் வரைக்கும் அதனுடைய சினை பற்றியோ, சினை பருவ அறிகுறிகளை பற்றியோ, சினை ஆக்குவதற்கு தேவையான பராமரிப்பு முறைகளை பற்றியோ கண்டுகொள்வதே இல்லை. இதுவே கறவை மாடு வளர்ப்பின் வீழ்ச்சிக்கு

மிக முக்கிய காரணமாக அமைகிறது.
உங்கள் மாடுகளை கன்று ஈன்ற மூன்று மாதத்திற்குள் சினை ஆக்கினால் மட்டுமே உங்களால் கறவை மாடு வளர்ப்பில் அல்லது பால் பண்ணை தொழிலில் மிக சிறந்த லாபத்தை காண முடியும். கன்று ஈன்ற இரண்டாவது மாதத்திற்குள் மாடுகள் சினை பருவத்திற்கு வந்துவிடும். மேலும் மாடுகள் ஒவ்வொரு 21 நாட்களுக்கு ஒருமுறை சினை பருவத்திற்கு வரும். மாடுகளை சினையாக்க ஒவ்வொரு சினை பருவமும் மிக முக்கியமான ஒன்றாகும். இவ்வாறு மாடுகள் சினை பருவத்திற்கு வந்தவுடன் மாடுகளில் கீழ்வரும் அறிகுறிகள் தென்படும்.

* மாடுகள் கத்திக்கொண்டே இருக்கும்.
* மற்றொரு மாட்டின் மீது தாவும்.
* கண்ணாடி நிறத்தில், கெட்டியாக திரவம் அறையிலிருந்து வழிந்தோடும்.
* தினமும் கொடுக்கும் பாலைவிட, பாலின் அளவு சற்று குறைவாகவே இருக்கும்.
* மிகுந்த சுறுசுறுப்பாக இருக்கும்.

மாடுகள் வளர்ப்போர் மேற்சொன்ன சினை பருவ அறிகுறிகளை நன்கு தெளிவுற தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

**கீழ்வருவனவற்றை கடைபிடிப்போம்! கறவை வளர்ப்பில் வெற்றி பெறுவோம்!**

* கன்று ஈன்று 7-10 நாட்கள் கழித்து மாடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்து கொடுக்க வேண்டும்.
* கன்று ஈன்று 10-15 நாட்கள் கழித்து மாடுகளுக்கு கால்சியம் கால்நடை மருத்துவர் மூலம் போட்டுக்கொள்ள வேண்டும்.
* கன்று ஈன்ற 30 நாட்கள் கழித்து தாது உப்பு கலவை (மினரல் மிக்சர்) 30 கிராம் முதல் 50 கிராம் வரை இரண்டு மாதங்களுக்கு கொடுக்க வேண்டும்.
* பசுந்தீவனங்கள் கிடைக்கப் பெறாத மாடுகளுக்கு வைட்டமின் ஏ (உயிர்ச்சத்து ஏ) ஊசி போட்டுக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் மாடுகள் சினை பருவத்திற்கு முறையாகவும், தகுந்த (21 நாட்கள்) இடைவெளியிலும் வருமாறு செய்யலாம். மேலும் கன்று ஈனும் சமயத்தில் ஈன்ற கன்றுகள் குருட்டு தன்மை இல்லாதவாறும் இருக்க உதவி செய்யும்.
* மாடுகள் சினை பருவத்திற்கு வந்தவுடன் கால்நடை மருத்துவரை அணுகி காலை, மாலை இரு வேளைகளிலும் சினை ஊசி போட்டுக்கொள்ள வேண்டும். முதல் சினை ஊசிக்கும் இரண்டாவது சினை ஊசிக்கும் 8 மணி நேர இடைவெளி இருத்தல் அவசியம். ஒரே நேரங்களில் இரண்டு சினை ஊசி போட்டுக் கொள்வதைவிட மேற்சொன்ன முறையில் சினை ஊசி போடும்போது மாடுகள் சினை ஆவதற்கான வாய்ப்பு அதிகமாக பெறுகின்றன.
* மேலும் ஒரு சில மாடுகள் அவற்றின் கன்று ஈனும் காலத்தில் நஞ்சு கொடியை வெளியே தள்ளுவதில்லை. அப்படிப்பட்ட மாடுகளில் கால்நடை மருத்துவர்களால் நஞ்சுகொடி கைகளினால் மாடுகளின் கருப்பையிலிருந்து வெளியே எடுக்கப்படுகிறது. இத்தகைய மாடுகளில்தான் சினையாக்குவதில் சிரமம் ஏற்படுகின்றது அல்லது காலம் தாழ்த்திய சினை ஏற்படுகின்றது.

**கீழ்வருவனவற்றை கடைபிடிப்பதன் மூலம் காலம் தாழ்த்திய சினையை தவிர்க்கலாம்.**

1. நஞ்சு கொடி எடுக்கப்பட்ட மூன்று நாட்களுக்கு தொடர்ந்து கால்நடை மருத்துவரின் சிகிச்சை மாடுகளுக்கு அவசியம்.

2. கன்று ஈன்ற 30வது நாட்களில் இருந்து மினரல் மிக்சர் (30 முதல் 50 கிராம் வரை) 2 மாதங்களுக்கு கொடுக்க வேண்டும்.

மாடுகள் சினை பருவத்திற்கு வந்தவுடன் முதல் பருவத்தில் சினை ஊசி போடுவதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். அதற்கு பதிலாக கால்நடை மருத்துவரை அணுகி கருப்பை எதிருயிரி மருந்து (யூடிரின் ஆன்டி பயாடிக்) கொண்டு கருப்பையை சுத்தம் செய்ய வேண்டும். ஒன்று அல்லது இரண்டு முறை கருப்பையை சுத்தம் செய்தபின்னர் அடுத்து வரும் சினை பருவத்தில் மாடுகளுக்கு சினை ஊசி போட்டுக்கொள்ள வேண்டும்.த.முத்துராமலிங்கம், த.பிரகாஷ் மற்றும் சபாபதி, கால்நடை மருத்துவ அறிவியல் துறை, கோவை.

**எண்ணெய் வித்து பயிர் மகசூல் திறன் அதிகரிக்க சிறப்பு திட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2011,01:27 IST

பள்ளிபாளையம்: "நடப்பு ஆண்டில், எண்ணெய் வித்து பயிர்களில் அதிக மகசூல் பெற சிறப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது' என, பள்ளிபாளையம் வேளாண் உதவி இயக்குனர் முரளிதரன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: எண்ணெய் வித்து உற்பத்தி திட்டத்தின் கீழ், 2010-11ம் ஆண்டில் சான்று விதை உற்பத்தி வினியோகம் பாசனநீர் கொண்டு செல்லும் பைப்லைன் வினியோகம், ஜிப்ஸம், விசைத்தெளிப்பான் மற்றும் கைத்தெளிப்பான் வினியோகம் உள்பட பல்வேறு திட்ட இனங்களுக்கு, மானிய நிதி ஒதுக்கீடு பள்ளிபாளையம் வட்டாரத்துக்கு பெறப்பட்டுள்ளது. சிறு, குறு, ஆதிதிராவிட விவசாயிகள், மகளிர் விவசாயிகளுக்கு திட்ட முன்னுரிமை வழங்கப்படும். எண்ணெய் வித்து பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள், தமது பகுதி உதவி வேளாண் அலுவலர்களை அணுகி தேவையான திட்ட உதவிகளை குறித்து தெரிந்து கொள்ளலாம். மேலும், பள்ளிபாளையம் வேளாண் விரிவாக்க மையத்தையும் விவசாயிகள் அணுகி, திட்ட தேவை விபரங்களை பதிவு செய்து கொள்ளலாம். எண்ணெய் வித்து பயிர்களான எள், நிலக்கடலை, ஆமணக்கு ஆகியவற்றின் மகசூல் திறனை அதிகரிக்க சிறப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மஞ்சள் விவசாயிகள் கவுன்சில் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2011,01:46 IST

அரூர் : அரூரில் மஞ்சளுக்கு விலை நிர்ணயம் செய்வது குறித்து விவசாயிகள் பங்கேற்ற ஆலோசனை கூட்டம் நடந்தது.
முத்துராமசாமி தலைமை வகித்தார். கருப்பண்ணன் முன்னிலை வகித்தார். இந்திய மஞ்சள் விவசாயிகள் கவுன்சிலர் அமைப்பாளர் தெய்வசிகாமணி, தமிழக விவசாயிகள் சங்க செல்முத்து, இந்திய உழவர் உழைப்பாளர் கட்சி வேட்டவலம் மணிகண்டன், ராமசாமி, வெங்கடாசலம், பொன்னுரங்கன், கதிரேசன், தமிழ்நாடு கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி, காசியண்ணன் ஆகியோர் பேசினர். "மஞ்சளுக்கு உரிய விலையை மத்திய, மாநில அரசுகள் நிர்ணயம் செய்ய வேண்டும். மஞ்சளை இருப்பு வைத்து விற்க ஈரோட்டில் கிடங்கு வசதிகளை அதிகரித்து ஒரு லட்சம் டன் மஞ்சள் இருப்பு வைக்க கிடங்குகளை தமிழக அரசு கட்டி கொடுக்க வேண்டும். விவசாயிகளின் விளை பொருட்களை விலை நிர்ணயம் செய்ய ஈரோட்டில் நடக்கும் மாநாட்டல் முன்னாள் குடியரசு தலைவர் அப்துல்கலாம் கலந்து கொள்வதற்கு நன்றி தெரிவிப்பது' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

**தமிழகம் முழுவதுமாக தக்காளி விலை கடும் சரிவு :வரத்து அதிகரிப்பால் கிலோ ரூ.3க்கு விற்பனை**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2011,01:12 IST

ஈரோடு: தமிழகத்தில் தக்காளி விளைச்சல் அதிகரிப்பால், வரத்து அதிகரித்து, கடும் விலை சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் கிலோ, 10 ரூபாய்க்கு விற்ற தக்காளி, தற்போது கிலோ, மூன்று ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஈரோடு மாவட்டம் அந்தியூர், பவானி, திருப்பூர் மாவட்டம் தாராபுரம், உடுமலை, தர்மபுரி மாவட்டம் ராயக்கோட்டை, போச்சம்பள்ளி, பாலக்கோடு, ஓசூர் மற்றும் கோவை மாவட்டம் பொள்ளாச்சி, சேலம் மாவட்டம் ஆத்தூர், மேட்டூர், கொளத்தூர், வாழப்பாடி ஆகிய இடங்களில், நாட்டுத்தக்காளி, கிராஸ் தக்காளி ஆகியவை அதிகளவில் உற்பத்தியாகிறது. பெங்களூரு, ஓசூர் பகுதிகளில், "பெங்களூரு' ரக தக்காளி உற்பத்தி செய்யப்படுகிறது. கிராஸ் தக்காளி, பெங்களூரு தக்காளி ஆகியவை பத்து நாட்கள் வரை வைத்து பயன்படுத்த முடியும், ஆனால், நாட்டு தக்காளி அதிகபட்சமாக ஐந்து நாட்களுக்கு மேல் வைத்து பயன்படுத்த முடியாது. இங்கிருந்து பெட்டிகளில் தக்காளியை வைத்து, சென்னை மற்றும் பிற மாவட்டங்களுக்கு அனுப்புகின்றனர். ஈரோடு மாவட்டத்தில் தினமும், 10 முதல், 15 டன்கள் தக்காளி விற்பனையாகிறது. இரண்டு மாதங்களாகவே, தர்மபுரி, கோவை மாவட்டங்களில் தக்காளி

விளைச்சல் அதிகரித்ததால், உரிய விலை கிடைக்காமல், விவசாயிகள் தவித்தனர். விவசாயிகளிடம், 15 கிலோ பெட்டி, 40 ரூபாய்க்கு வாங்கி வந்து, கிலோ, 10 ரூபாய்க்கு வியாபாரிகள் விற்றனர். தற்போது விளைச்சல் அதிகரித்ததால், பல்வேறு இடங்களில் இருந்து வரத்தும் அதிகரித்துள்ளது. 15 கிலோ பெட்டி மொத்த விலைக்கு, 30 ரூபாய்க்கும், பத்து கிலோ பெட்டி, 20 முதல், 25 ரூபாய் வரை விற்கிறது. ஈரோடு பெரிய மார்க்கெட் மற்றும் உழவர் சந்தையில், நாட்டுத் தக்காளி கிலோ மூன்று ரூபாய்க்கும், கிராஸ் தக்காளி நான்கு ரூபாய்க்கும், பெங்களூரு தக்காளி சிறியது கிலோ ஐந்து ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது ஈரோடு, சேலம் மாவட்டத்தில் மழை பெய்வதால், தக்காளி செடிகளிலிலேயே அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது. வரத்து குறைந்தால் மட்டுமே, தக்காளி விலை உயரும், இல்லையேல், நஷ்டத்தை தவிர்க்க, பெங்களூரு தக்காளியை அதிகமாக வாங்கி விற்பனை செய்வோம் என, ஈரோடு மார்க்கெட் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

**வெங்காய பயிரில் "இலைப்பேன்' கட்டுப்படுத்த அதிகாரி யோசனை**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2011,01:54 IST

லாலாப்பேட்டை: "கிருஷ்ணராயபுரம் வட்டாரத்தில் விவசாயிகள் சாகுபடி செய்துள்ள வெங்க ாய பயிரில் இலைப்பேன் தாக்குதøலை கட்டுப்படுத்தலாம்' என தோட்டக்கலை உதவி இயக்குன ர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: வெங்காய பயிரில் இலைப்பேன், வெங்காய ஈ, வெட்டுப்புழு தாக்குதல் காணப்படுகிறது. இலைப்பேன் பூச்சிகள் வெளிர் மஞ்சள் நிறத்தில் காணப்படும். பூச்சிகள் இலைகளை சுரண்டி சாறை உறிஞ்சும். இதனால் இø லகள் வெண்திட்டுகளாக காணப்படும். இø லகள் நுனியிலிருந்து வாடும். இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 200 மில்லி "தைல்டெமெட்டான்' அல்லது 125 மில்லி பாஸ்போமிடான் அல்லது புரபினோபாஸ், இர ண்டு மி.லிட்டர் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து தெளித்து கட்டுப்படுத்த வேண்டும்.

வெங்காய ஈ சாம்பல் நிற ஈக்கள் மண்ணில் உள்ள இருக்குகளில் முட்டையிடும். அவற்றிலிருந்து வரும் தண்டுப்பகுதி மற்றும் வெங்காயத்தை குடைந்து தின்று அழுகச்செய்யும். இதனை க் கட்டுப்படுத்த "மிதைல்டெமெட்டான்' 25 இசி ஒரு மில்லி மருந்தை ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும் அல்லது "மானோகுரோட்÷ டா பாஸ்' ஒரு மில்லி மருந்துடன் டீப்பால் 0.5 மில்லியை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்த கலவையுடன் கலந்து தெளிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம் 28ல் ஏற்பாடு**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2011,01:38 IST

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 28ம் தேதி நடக்கிறது என மாவட்ட கலெக்டர் தரேஷ்அஹமது தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 28ம் தேதி காலை 11 மணிக்கு நடக்கிறது. கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் தங்களது விவசாய பணிகள் தொடர்பான பாசன ஏரி, வாய்க்கால்கள் தூர்வாருதல், வங்கி கடனுதவி, உரம், வேளாண்மை இயந்திரங்கள், விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும். எனவே இக்கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு குறைகளை தெரிவித்து பயன்பெறலாம். கூட்டத்தில் அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டு விவசாயிகளின் கோரிக்கை மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க உள்ளனர். எனவே பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

**கரும்பை உரியகாலத்தில் அறுவடை செய்யணும்: சர்க்கரை ஆலைகளுக்கு அரசு உத்தரவிட எம்.எல்.ஏ., கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2011,02:01 IST

புதுக்கோட்டை: "புதுக்கோட்டை மாவட்டத்தில் கரும்பு பயிர்களை உரிய காலத்தில் அறுவடை செய்ய சர்க்கரை ஆலைகளுக்கு உத்தரவிட வேண்டும்' என மாவட்ட நிர்வாகத்தை எம்.எல்.ஏ., முத்துக்குமரன் வலியுறுத்தியுள்ளார்.

புதுக்கோட்டையில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் கலெக்டர் மகேஸ்வரி தலைமையில் நடந்தது. டி.ஆர்.ஓ., ராமதாஸ், திட்ட இயக்குனர் குமார், வேளாண் இணை இயக்குனர் தங்கவேல் உட்பட அரசுத்துறை அதிகாரிகள் பலர் பங்கேற்றனர். கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு: முத்துக்குமரன் (எம்.எல்.ஏ.,): புதுக்கோட்டை மாவட்டத்தில் குறுவை சாகுபடிக்கான உழவுப் பணிகள் துவங்கியுள்ள நிலையில் விவசாயிகளுக்கு பயிர்கடன் வழங்க வங்கி மேலாளர்கள் மறுத்துவருகின்றனர். நகை அடமானத்தின் பேரில் மட்டுமே விவசாயக்கடன் வழங்கப்படுகிறது. இந்த நிலை மாறவேண்டும். விவசாயிகள் அனைவருக்கும் வங்கிகள் மூலம் பயிர்க்கடன் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். விவசாயிகள் சாகுபடி செய்துள்ள கரும்பு பயிர்களை உரிய காலத்துக்குள் அறுவடை செய்ய தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு உத்தரவிட வேண்டும். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பில் விவசாயப் பணிகளுக்கு 50 சதவீத மானியத்துடன்

கடன் வழங்க 35 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்ட நிலையில் இதுவரை 13 விவசாயிகளுக்கு மட்டுமே வங்கிகள் மூலம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. கடன் வழங்கி மாதங்கள் பல கடந்தும் இவர்களுக்கு மானியத் தொகை இதுவரை வழங்கப்படவில்லை. இதில் கலெக்டர் தனிக்கவனம் செலுத்தி தேர்வு செய்யப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் கடன் வழங்க நடவடிக்கை எடுப்பதோடு, மானியத் தொகையை அவர்களது வங்கி கணக்கில் வரவு வைக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். கலெக்டர்: விவசாயிகள் அனைவருக்கும் பயிர்கடன் வழங்க வங்கிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. கடன் வழங்க மறுக்கும் வங்கிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். கரும்பு பயிர்களை உரிய காலத்துக்குள் வெட்ட சர்க்கரை ஆலைகளுக்கு உத்தரவிடப்படும். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பில் வழங்கப்பட்டுள்ள விவசாயக் கடன்களுக்கான மானியத் தொகை விரைவில் விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். பொன்னுசாமி (விவசாயி): புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏராளமான விவசாயிகள் குத்தகை அடிப்படையில் பயிர் சாகுபடி செய்கின்றனர். இவர்களுக்கு உழவடை பட்டா வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும். காமராஜ் (விவசாயி): புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி, வடகாடு, கொத்தமங்கலம், திருவரங்குளம், கீரமங்கலம் உள்ளிட்ட பல பகுதிகளில் ஏராளமான பலா மரங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆண்டுக்கு ஒருமுறை ஏராளமான பலாப்பழம் அறுவடை செய்யப்படுகிறது. அறுவடை காலங்களில் பலாப்பழங்களுக்கு போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் பலத்த இழப்புக்கு உள்ளாகி வருகின்றனர். இதை தவிர்க்கும் விதமாக கேரளாவைப் போன்று புதுக்கோட்டை மாவட்டத்திலும் பலாப்பழ சுளையின் மூலம் சிப்ஸ் தயாரிப்பதற்கான நிறுவனத்தை துவக்கவேண்டும். ராமமூர்த்தி (விவசாயி): புதுக்கோட்டை மாவட்டத்தில் உழவர்மன்றத்தின் செயல்பாடு சரியில்லை. விவசாயிகளுக்கு பயனளிக்கும் விதமாக உழவர் மன்றத்தை முறையாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**மரவள்ளிக்கு மானிய விலையில் உரம்: விவசாயிகள் எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 26,2011,23:17 IST

சிறுபாக்கம் : மரவள்ளி பயிருக்கு மானிய விலையில் உரம் கிடைக்குமா என மங்களூர், நல்லூர் ஒன்றிய விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். மங்களூர் மற்றும் நல்லூர் ஒன்றியங்களில் 100க்கும் மேற்பட்ட சிறு, குறு விவசாயிகள் தங்களின் நீர் பாசன நிலங்களில் தோட்டக்கலை பயிரான மரவள்ளி கிழங்கு பயிர்களான பர்மா, குங்கும ரோஸ், வெள்ளை ரோஸ் ரகங்களை பயிர் செய்து வருகின்றனர். ஒரு வருட பயிரான மரவள்ளி கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில்

பயிரிடப்பட்டது. மரவள்ளிச் செடிகள் தற்போது வளர்ச்சியடைந்த நிலையில் எதிர் வரும் மாதத்தில் பருவ மழை துவங்க உள்ளதால், அதற்கான அடியுரமிடும் ஏற்பாடுகளை விவசாயிகள் செய்து வருகின்றனர். பொட்டாஷ், டி.ஏ.பி., சூப்பர், யூரியா ஆகியவை தட்டுப்பாடு மற்றும் கடும் விலையேற்றம் உள்ளதால் மரவள்ளி பயிர் செய்துள்ள விவசாயிகள் உரம் கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, மரவள்ளி பயிர் செய்துள்ள விவசாயிகளுக்கு அரசு தோட்டக்கலைத்துறை மூலம் மானிய விலையில் உரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

**கரும்பு அறுவடை பணி தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 26,2011,21:43 IST

ஆனைமலை : ஆனைமலை சுற்றுவட்டார பகுதிகளில் கரும்பு அறுவடை செய்யும் பணி நடந்து வருகிறது. ஆனைமலை பகுதிகளில் 800 ஏக்கருக்கும் அதிகமாக கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. தற்போது அறுவடைக்கு தயாராகி உள்ளதால் தனியார் கரும்பு ஆலைக்கு வெளிமாநில ஆட்கள் மூலம் கரும்பு வெட்டி அனுப்பப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு ஒரு டன்னிற்கு 1987.60 ரூபாய் விலை தரப்படுகிறது. தனியார் கரும்பு ஆலைகள் மூலம் விவசாயிகளுக்கு பயிர்க்கடனாக கரும்பு உற்பத்திக்கு ஏக்கருக்கு 25,000 ரூபாய் கடனும் பெற்றுத்தரப்படுகிறது. இங்கு அறுவடை செய்யப்படும் கரும்பில் ஆலைகள் சர்க்கரை உற்பத்தி செய்துவிட்டு அதன் கழிவுகளில் உரம் தயாரிக்கும் பணியையும் செய்து வருகிறது. விவசாயக்கூலி ஆட்கள் பற்றாக்குறையால் முன்பிருந்ததை விட கரும்பு உற்பத்தி குறைந்து விட்டதாக விவசாயிகள் கூறினர்.

**தேயிலை செடிக்கு கவாத்து பணி தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 26,2011,21:42 IST

வால்பாறை : வால்பாறையில் தென்மேற்குப்பருவ மழை தீவிரமடைந்துள்ளதால் தேயிலை செடிக்கு கவாத்து வெட்டும் பணி நடந்து வருகிறது. வால்பாறையில் தேயிலை அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளது. இங்கு உற்பத்தியாகும் தேயிலை கோவை, குன்னூர், கொச்சி போன்ற ஏல மையங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. சாதாரண தேயிலை தூள் கிலோ ரூ.200 க்கும், ஆர்கானிக் ரக தேயிலை தூள் கிலோ ரூ.800 க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வால்பாறையில் தற்போது தென்மேற்கு பருவமழை தீவிரமாக பெய்துவருவதால் தேயிலை உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது. இதனையடுத்து வால்பாறையில் உள்ள பல்வேறு எஸ்டேட் பகுதிகளில் தேயிலைக்கு "கவாத்து' வெட்டும் பணி தீவிரமடைந்துள்ளது. வால்பாறை உபாசி தேயிலை ஆராய்ச்சியாளர்களிடம் கேட்ட போது,

தேயிலை உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் வால்பாறையில் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேயிலை செடிக்கு காவாத்து வெட்டும் பணி நடந்து வருகிறது. கவாத்து வெட்டப்பட்ட பின்னர் 3 மாதங்களுக்கு பிறகு தேயிலை உற்பத்தி வேகுவாக அதிகரிக்கும். தற்போது தென்மேற்குப்பருவ மழை தீவிரமாக பெய்வதால் இந்த தருணத்தில் தேயிலைக்கு கவாத்து வெட்டுவது பயனுள்ளதாக அமையும் என்றனர்.

**தரமான பசுந்தேயிலைக்கு விலை தரும் தொழிற்சாலையை தேர்வு செய்ய அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூலை 26,2011,23:21 IST

மஞ்சூர் : "தரமான இலைக்கு நல்ல விலையை பெற்று தரும் தொழிற்சாலைக்கு பசுந்தேயிலையை வினியோகிக்க வேண்டும்,' என தேயிலை வாரிய தென் மண்டல செயல் இயக்குனர் அம்பலவாணன் அறிவுரை வழங்கினார். தேயிலை வாரியம் சார்பில் மஞ்சூர் எச்.கே., டிரஸ்ட் கட்டடத்தில் தேயிலை தர மேம்பாட்டு முகாம் நடந்தது. தேயிலை விவசாயிகளுக்கு தேயிலை தர மேம்பாட்டு குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. இதில், தேயிலை தர மேம்பாட்டு திட்ட அலுவலர் சிவக்குமார் பேசுகையில்,"மஞ்சூர் பகுதியை பொறுத்த வரையில் தேயிலை தர மேம்பாட்டு குறித்து போதுமான செயல் திட்டம் இல்லை என தொடர்ந்து புகார் வந்ததை அடுத்து, மஞ்சூர் பகுதியில் செயல் திட்டம் நடத்த முடிவு செய்துள்ளோம். நீலகிரி மாவட்டத்தில் 116 சிறு விவசாயிகள் சங்கம் ஏற்படுத்தியுள்ளனர். இதில் 56 சங்கம் தேயிலை வாரியத்தில் பதிவு செய்துள்ளனர். சிறு விவசாயிகள் சங்கங்களுக்கு தேயிலை வாரியம் மூலம் வாகனம் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்கு 1 கோடி ரூபாய் வரைக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. 20 சங்கம் தொழிற்சாலையுடன் இணைந்து தரமான இலையை வினியோகித்து நல்ல விலையை பெற்று வருகின்றனர். மஞ்சூர் பகுதியில் உள்ள 6 சிறு விவசாயிகள் சங்கத்தில் கீழ்குந்தா சிறு விவசாயிகள் சங்கம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது,' என்றார். தேயிலை வாரிய தென் மண்டல செயல் இயக்குனர் அம்பலவாணன் பேசுகையில், ""நீலகிரி மாவட்டத்தில் 80 சதவீத தொழிற்சாலைகள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. தரமான தேயிலை உற்பத்தி செய்வதன் மூலம் நல்ல விலையும் கொடுத்து வருகின்றனர். விவசாயிகள் தங்கள் நிலங்களை கண்டிப்பாக சப்-டிவிஷன் செய்து வைத்தால் நல்லது. விவசாய நிலங்கள் பதிவு செய்யப்பட்டு கம்ப்யூட்டர் மயமாக்கப்படும். மேலும் தரமான இலைக்கு நல்ல விலையை பெற்று தரும் தொழிற்சாலைக்கு பசுந்தேயிலையை வினியோகிக்க வேண்டும்," என்றார். இதில், தலைமை விஞ்ஞானி ராம மூர்த்தி வரவேற்றார். இன்கோ சர்வ் முன்னாள் சேர்மன் ரங்கய்யா, சாம்ராஜ் மேலாளர் இக்பால், மூத்த விஞ்ஞானி டாக்டர் சேதுமாதவன், தர மேம்பாட்டு திட்ட அலுவலர்

சிவக்குமார் முன்னிலை வகித்தனர். மஞ்சூர் பகுதி விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். பெள்ளியப்பன் நன்றி கூறினார்.

தினகரன்

## வெற்றிலை விலை சரிந்தது

பதிவு செய்த நாள் : 7/27/2011 1:6:42



பரமத்திவேலூர்: ஆடி மாதம் காரணமாக பரமத்திவேலூர் சந்தையில் வெற்றிலை விலை சரிவடைந்துள்ளது. நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூரில் தினசரி வெற்றிலை சந்தை செயல்பட்டு வருகிறது. இங்கிருந்து வெள்ளை வெற்றிலைசென்னை, கோவை, திண்டுக்கல், செங்கல்பட்டு, திண்டிவனம் பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது.

ஆடி மாதத்தில் திருமணம் போன்ற விசேஷங்கள் இல்லாததால் சந்தையில் தற்போது வெற்றிலை விலை சரிந்துள்ளது. கடந்த வாரம், கற்பூரி வெற்றிலை 20 கவுளிகள் கொண்ட ஒரு கூடை ரூ.400க்கு விற்பனையானது. இது தற்போது ரூ.300 ஆக குறைந்துள்ளது. இதே போன்று, கடந்த வாரம் ரூ.400க்கு விற்ற ஒரு கூடை கற்பூரி சக்கை வெற்றிலை நேற்று ரூ.350க்கு விற்பனையானது. கடந்த வாரம் ரூ.300க்கு விற்ற தைபட்ட கற்பூரி வெற்றிலை நேற்று ரூ.250க்கு விற்பனையானது.